[17th July 1964.

கால்நடை தீவன உற்பத்தி நிலையம்

*520 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் சேலம் மாவட்டத்தில் கால்நடைத் தீவன உற்பத்தி நிலையங்களை நிறுவும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், அவைகள் எங்கெங்கு நிறுவப்படும் ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—ADJOURNMENT MOTIONS.

(1) COLLAPSE OF THE SARASWATHI HIGH SCHOOL BUILDING, MANINAGARAM, MADURAI.

MR. SPEAKER: The hon. Member, Sri M. Kalyanasundaram, has given notice of an adjournment motion to discuss the inadequate relief given to the families of the victims in the collapse of the building of the Saraswathi High School, Maninagaram, Madurai.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சபை காலம் கடந்து கூடுகிறது. குறைந்த நாட்களே கூடுகிறது. அதற்குள் மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையினால் உடனடியாக இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக்கொண்டு வந்திருக்கிறேன். குறிப்பாக மதுரையில் ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம் திடீரென்று இடிந்து விழுந்ததும், அதனால் பல மாணவிகள் உயிர் இழந்ததும், அதன் காரணமாக நாடு பூராவும் துக்கப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயம். இதுபற்றி அரசாங்கமே ஓர் அறிக்கையைச் சபை முன்பு வைத்து விவாதம் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பார்கள் என்று எதிர்ப்பார்த்தோம். அத்தகைய முக்கியமான விஷயத்தில் எங்களுடைய யோசனைகள் மிகவும் உதவியாகக் கூட இருக்கலாம். அப்படிச் செய்யும்படியாக நான் பிசினஸ் அட்வைசரிக் கமிட்டியில் கூறியபோது கனம் அமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையில்லை என்று கூறிவிட்டார்கள். காலம் கடந்து விட்டது என்று சொன்னாலும் சபை இப்போதுதான் கூடுகிறது. முப்பத்தைந்து மாணவிகள் உயிர் துறந்திருப்பதும், இன்னும் ஆசிரியைகள் உட்பட பலர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதும் எல்லோருக்கும் தெரியும். சிலர் இப்போது தான் மருத்துவ மனையை விட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு